மாலை முரசு

# இந்துவின் முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் காலமானார்!



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் (வயது 89) இன்று அதிகாலை காலமானார்.

02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை 28.12.2025 | அதிர்வு 151

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# டக்ளஸுக்கு ஜனவரி 9 வரை விளக்கமறியல்



## அவரின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட மேலும் 19 துப்பாக்கிகள் குறித்து தீவிர விசாரணை

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா நீதிவான் முன்னிலையில் அவர் இன்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தால் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்று, 2019ஆம் ஆண்டு பாதாள உலகக் குழு உறுப்பினரான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காகவே அவர் கடந்த 26 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.

02

# அரசின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பம்! மாகாண சபைத் தேர்தல் நடக்காது!!



## இப்படி அடித்துக் கூறுகின்றார் ராஜித

“தேசிய மக்கள் சக்தி அரசின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பித்துவிட்டது. எனவே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெல்லும்போது தேசிய மக்கள் சக்தி வலுவாக இருந்தது. அதனால்தான் உள்ளூராட்சி சபைகளில் வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர்.

எனினும், இந்த அரசு ஓடாது, நிச்சயம் விழும் என எதிரணி உறுப்பினர்கள் நம்புகின்றனர்.

02

# நாட்டின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் நடவடிக்கையை அரசு நிறுத்த வேண்டும்!

## முன்னாள் எம்.பி. சுரேஷ் இடித்துரைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் திட்டமிட்டு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் பௌத்த ஆலய கட்டுமானங்கள் ஒருபோதும் இலங்கையில் அமைதியைக் கொண்டுவராது என்றும், இலங்கையின் வளர்ச்சிக்கு பங்களிக்காது என்றும் தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சிஸ்டம் சேஞ்சை முன்வைத்து ஆட்சிப் பீடம் ஏறியுள்ள இடதுசாரி ஜனநாயகம் பேசும் இன்றைய அரசு அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி நாட்டின் நிலையான அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் சிங்கள பௌத்த மக்கள் வாழாத இடங்களில் அடாத்தாகப் பிடித்த பல காணிகளில் இராணுவத்தினரின் உதவியுடன் புத்தகோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பொழுது ஆட்சியிலிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இவற்றைத் தடுத்து நிறுத்தாமல் சட்டவிரோதமாகக் கட்டப்படும் புத்தவிகாரைகளை இன்னும் ஆதரித்து செயற்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் - தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணிகளைப் பறிமுதல் செய்து, தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, சட்டவிரோதமான முறையில் ஒரு பௌத்த ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது.

நயினாதீவில் இருக்கும் நாகவிகாரையின் விகாராதிபதி, இந்தக் காணிகள் விகாரைக்கு உரித்தானதல்ல என்பதையும், அதில் கட்டப்பட்டிருக்கும் விகாரை சட்டவிரோதமானது என்பதையும், தமிழ் மக்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதையும், அவர்கள் தம்முடன் அன்புடன் பழகுகிறார்கள் என்பதையும் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பதுடன் ஐம்பத்து மூன்று வருடங்களாக தாம் இந்தப் பிரதேசத்தில் வசித்து அந்த மக்களுடன் பழகி வருகின்றேன் என்ற அடிப்படையிலும், தையிட்டி நாகவிகாரை கட்டுமானமானது சட்டவிரோதமானது என்றும் சிங்கள மக்களுக்குச் சிங்கள மொழிமூலம் அளித்துள்ள பேட்டியில் கூறியிருக்கின்றார்.



நிலைமை அவ்வாறிருக்க, சட்ட விரோதமான விடயங்களை ஏற்கமாட்டோம் என்று கூறுகின்ற இந்த அரசாங்கம் சட்டரீதியாக அந்த மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கொடுப்பதை விடுத்து, தொடர்ந்து அந்த மக்களுடன் பேரம் பேசுவதும் வேறிடத்தில் காணிகள் தருகிறோம் என்று கூறுவதும் சட்ட விரோதத்திற்குத் துணைபோவதாகவே பொருள்கொள்ளப்படும்.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் பல இடங்களில், புராதன பௌத்த சின்னங்கள் இருக்கின்றன என்ற பெயரில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு அங்கு புத்த கோயில்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

இது பௌத்த நாடு, நாங்கள் விரும்பிய எதனையும் செய்யலாம் என்ற மனோபாவத்துடன் பெரும்பாலான புத்த பிக்குகளும் படையினரும் அவர்களுக்கு சாதகமான அரசியல்வாதிகளும் செயற்பட்டு வருவதானது நாட்டின் ஒற்றுமைக்குக் குந்தகமானது என்பதை அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் சாசனத்தில் பௌத்தத்திற்கு முதன்மைஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகியோரே மிகப் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். மிக சொற்பமான அளவில் சிங்கள பௌத்த மக்களும் வாழ்கிறார்கள். ஆகவே, அத்தகையதோர் பிரதேசத்தில் பௌத்தத்திற்கு முதலிடம் இருக்க வேண்டும் என்பது ஜனநாயகபூர்வமானதுமல்ல நியாயமானதுமல்ல.

வடக்கு, கிழக்கில் தற்பொழுது கட்டப்பட்டு வரும் புத்தகோயில்களின் சுற்றாடல்கள் அனைத்துமே தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களாகும். இந்தப் பிரதேசங்களில் சிங்கள பௌத்த மக்கள் எவருமே கிடையாது. இவ்வாறான இடங்களில் புத்தகோயில்களைக் கட்டுவதென்பது புத்த பெருமானை அவமதிப்பதும் பௌத்தத்திற்குத் தீங்கு விளைவிக்கும் செயலுமாகும்.

உங்களது இந்தக் கட்டுமானங்கள் அனைத்தையும் நோக்குகின்றபோது வடக்கு--கிழக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுகின்ற உங்களது நோக்கம் எங்களுக்குப் புரிகின்றது.

ஒருபுறத்தில் சமத்துவம், சகோதரத்துவம், இனங்களுக்கிடையில் ஐக்கியம் பற்றிப் பேசும் உங்கள் அரசாங்கம், இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் துணைபோவதென்பது நீங்கள் பேசுகின்ற விடயங்களை நிர்மூலமாக்குமே தவிர, நாட்டில் ஐக்கியத்தை உருவாக்காது என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்." - என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### டக்ளஸ்'க்கு...

மாகந்துர மதூஷிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட அந்தத் துப்பாக்கியின் இலக்கங்களைச் சோதித்தபோது, அது டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி என்பது தெரியவந்தது.

இது தொடர்பில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குறித்த துப்பாக்கி காணாமல்போனமை குறித்து தெளிவுபடுத்தத் தவறியமையால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் 72 மணி நேர பொலிஸ் தடுப்புக்காவல் உத்தரவில் விசாரிக்கப்பட்ட நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, டக்ளஸ் தேவானந்தாவுக்கு அவரின் தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தால் வழங்கப்பட்ட மேலும் 19 துப்பாக்கிகள் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. 15 ரி - 56 ரக துப்பாக்கிகள், 4 கைத்துப்பாக்கிகள் அவற்றுள் அடங்குகின்றன. அந்தத் துப்பாக்கிகள் எங்கே என்பது குறித்த விசாரணைகள் தீவிரமடைந்துள்ளன.

### இந்துவின்...

இவர் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரும், சிறந்த கல்வியியலாளரும், மாணவர்களைப் பல்வேறு துறைகளிலும் ஆளுமைமிக்கவர்களாக உருவாக்கியவரும் ஆவார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட இவர், கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பணம் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றிருந்தார்.

இவர் உரும்பிராய் மற்றும் திருநெல்வேலியில் பாலகர்களுக்கான திறன் விருத்தியை மேம்படுத்துவதற்காக "கிட்ஸ் பார்க்" என்னும் ஆரம்பக் கல்வி நிறுவனத்தை மிகவும் சிறப்பாக இறக்கும் வரை நடத்தி வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் தலைவராகவும் பொறுப்பாளராகவும் பணியாற்றி வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### அரசின் வீழ்ச்சி...

ஓராண்டு கடந்தும் உள்ளூராட்சி சபைகள் ஊடாக எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால்தான் எதிரணி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்கின்றனர்.

மக்கள் மத்தியில் இந்த அரசு நம்பிக்கை இழந்து வருகின்றது.

எனவே, மாகாண சபைத் தேர்தலை இந்த அரசு நடத்தாது. ஏனெனில் ஒரு சபையைக் கூட வெல்ல முடியாத நிலையே இந்த அரசுக்கு உள்ளது." - என்றார்.



# 3 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

## ஜனவரி 7 ஆம் திகதி வரை விளக்கமறியல்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 3 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 9.45 மணியளவில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மேற்படி 3 மீனவர்களும் கரையோரப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதன்பின்னர் அவர்கள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் பாரப்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், முற்பகல் 11 மணியளவில் ஊர்காவற்றுறை நீதிவான் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் அதிகாலை பரபரப்பு! தோஹாவிலிருந்து வந்த விமானத்துக்கு குண்டு மிரட்டல்!!




கட்டார் நாட்டின் தோஹாவிலிருந்து இலங்கை வந்த விமானம் ஒன்றுக்கு விடுக்கப்பட்ட போலி குண்டு மிரட்டல் காரணமாக, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இன்று அதிகாலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தோஹா ஹமாத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இன்று அதிகாலை 1.44 மணியளவில் புறப்பட்ட குறித்த விமானத்தில், பயணிகளாக மாறுவேடமிட்டுள்ள 4 பேர் தற்கொலைத் தாக்குதல் நடத்தத் தயாராகி வருகின்றனர் என்று விமான நிலைய மின்னணு கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு மின்னஞ்சல் ஊடாக மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, விமானம் கட்டுநாயக்கவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதுடன், அதிலிருந்த 245 பயணிகள், 10 பணியாளர்கள் மற்றும் 2 விமானிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

உடனடியாகக் களமிறங்கிய விமானப் படையின் வெடிகுண்டு முறியடிப்புப் பிரிவினர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் விமானத்தை முழுமையாகச் சோதனை செய்தனர்.

பல மணிநேரத் தீவிர சோதனைக்குப் பின்னர், விமானத்தில் குண்டுகளோ அல்லது சந்தேகத்துக்குரிய பொருட்களோ எதுவும் கண்டெடுக்கப்படவில்லை எனவும், அது ஒரு போலி மிரட்டல் எனவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த மிரட்டல் மின்னஞ்சலை அனுப்பிய நபர்கள் குறித்த விசாரணைகளைத் தற்போது புலனாய்வுப் பிரிவினர் முடுக்கிவிட்டுள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பின்னடைவுக்குக் காரணம்

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 23 லட்சத்தைக் கடந்துள்ளது. நேற்று முந்தினம் வரையான காலப்பகுதியில் சுமார் 23 லட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதற்குப் பின்னரான ஐந்து நாள்களையும் சேர்த்து வரும் புதன்கிழமை இந்த வருடம் முடியும் போது இந்த எண்ணிக்கை 24 லட்சத்தை எட்டக் கூடும்.

2022 ஆம் ஆண்டு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு முடங்கிப் போன இலங்கையின் நிதிக் கட்டமைப்பை மீளத் தூக்கி நிறுத்துவதில் உல்லாசப் பயணத் துறை முக்கிய இடத்தை வகிக்கிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டெழுவதாயின் நாட்டினுடைய அந்நிய செலாவணிக் கையிருப்பு அதிகரிக்க வேண்டும்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமோ அல்லது வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையரின் நிதி அனுப்புகை மூலமோ அந்நிய செலாவணியை ஈட்ட முடியுமாயினும் அந்த திசையில் நாடு அந்நிய செலாவணியை ஈட்டும் முயற்சிகள் உடனடியாக பயன் தருவனவாக இல்லை என்பதுதான் கள நிலைமை.

அதனால்தான் மூன்றாவது வழிமுறையாக உல்லாசப் பயணத் துறையை நாடு மிக முனைப்பாக முன்னெடுக்கின்றது. வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகள் இங்கு செலவிடும் அவர்களது நாட்டு நாணயம் மூலம் இலங்கை உள்நாட்டு செலாவணிக் கையிருப்பை அதிகரித்துக் கொள்ள முடியும். அதற்காகத் தான் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை வெற்றிலை வைத்து அழைக்கும் வேலையை இலங்கை மும்முரமாக முன்னெடுக்கின்றது.

இந்த ஆண்டில் மொத்தம் 30 லட்சம் உல்லாசப் பயணிகளை நாட்டுக்குள் தருவிக்கும் திட்டத்தில் இலங்கை அரசு இயங்கிய போதிலும், ஆக உச்சமாக 24 லட்சம் சுற்றுலாப் பயணிகளே நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர்.

அரசாங்கத்தின் உத்தேசத் திட்டம் முழுமையான வெற்றியை ஈட்டாமல் போனதற்கு பிரதான காரணம் வெளிநாட்டுப் பயணிகளை வரவேற்றுக் கையாளுவதற்கு கட்டுநாயக்கா விமான நிலையம் மாத்திரம் போதுமானது அல்ல என்ற கள யாதார்த்தப் பிரச்சினைதான்.

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளில் அதிகமானோர் இந்தியர்கள். அவர்களை அவர்களது நாட்டுக்கு மிக நெருக்கமான காங்கேசன்துறை துறைமுகம் ஊடாகவோ அல்லது யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாகவோ நாட்டுக்குள் அழைக்க முடியும். ஆனால் அப்படி அவர்களை அங்கு வரவேற்பதாயின் யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச போக்குவரத்துத் தளங்களை விருத்தி செய்ய வேண்டும். பௌத்த - சிங்களப் பேரினவாத மாயையில் இன்னும் கட்டுண்டு கிடக்கும் கொழும்பு அதை செய்வதற்கு தயாராக இல்லை. அதனால்தான் பலாலி மற்றும் காங்கேசன்துறை அபிவிருத்திப் பணிகள் உரிய நன்கொடை நிதி கிட்டியும் முன்னெடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன.

நாட்டின் விருத்திதான் அரசுக்கு முக்கியம் என்றால் இனவாதமும் பேரின மேலாதிக்க சிந்தனையும் பின் ஒதுக்கப்பட்டு நாட்டின் நலன் கருதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கொழும்புத் தலைமையிடம் அதுதான் முக்கிய பின்னடைவாக இருக்கின்றது. உல்லாச பயணத்துறை மேம்பட்டு அந்நிய செலாவணி கையிருப்பு உயர்வதற்கு முட்டுக்கட்டையாகவும் இருப்பது அந்த மேலாதிக்க சிந்தனைப் போக்குத்தான்.







# அம்பாறை மாவட்ட கண்காட்சியும் கலாசார நிகழ்வும் அறுகம்பேயில்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "Wings of East 2025" நிகழ்ச்சியின் அம்பாறை மாவட்ட கண்காட்சி மற்றும் கலாச்சார இசை நிகழ்ச்சி என்பன அண்மையில் அம்பாறை அறுகம்பேயில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வு ஏராளமான கலாசார மதிப்புமிக்க பொருள்கள், பாரம்பரிய உணவுக் கடைகள், கலாச்சார இசை நிகழ்ச்சிகள் மற்றும் பிற அம்சங்களுடன் வண்ணமயமாக இருந்தது.

கிழக்கு மாகாண கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர், அம்பாறை நகர சபைத் தவிசாளர், அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் இதில் கலந்து கொண்டனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அரிசி 135 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது



சந்நிதியான் ஆச்சிரமத்தால் 135 குடும்பங்களுக்கு அத்தியவசியமான உணவுப் பொருளான அரிசி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு 3 லட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப்பொருளான அரிசி வழங்கப்பட்டது.

குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ப 15 கிலோ, 12 கிலோ, 10 கிலோ, 07 கிலோ என்ற அடிப்படையில், வெள்ளிக்கிழமை இது வழங்கப்பட்டது.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார்.

இந்த உதவித் திட்டம் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் 336 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வுகள்!



யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டாமனாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாதந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக மலரான ஞானச்சுடர் 336 ஆவது மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், இடம்பெற்றது.

இதில் வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் சோ.பரமநாதனும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# இலங்கை விவகாரத்தில் இந்தியா, நோர்வேயின் செயற்பாடுகளை முழுமையாக நிராகரிக்கவில்லை!

## விமர்சகர்களிடம் அதிருப்திகளே உள்ளன என்கிறார் ஜி.எல்.பீரீஸ்

இலங்கை விவகாரத்தில் இந்தியா, நோர்வே உள்ளிட்ட நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக விமர்சனங்கள் அதிருப்திகள் காணப்பட்டாலும் அந்த விமர்சனங்களைச் செய்தவர்கள் கூட வெளிநாடுகளின் வகிபாகத்தை முழுமையாக நிராகரிக்கவில்லை என்று முன்னாள் அமைச்சரும் தகைசார் பேராசிரியருமான ஜி.எல்.பீரீஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலின் சமாதானப் பேச்சுவார்த்தை காலகட்டத்தின் நிகழ்வுகளை ஆராய்ந்து ஜி.எல்.பீரீஸ் அண்மையில் எழுதி வெளியிட்ட "இலங்கை அமைதி செயல்முறை ஒரு உள்பார்வை" எனும் நூலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் பெருமளவில் பாதித்த தரப்பினராக பெண்களே உள்ளனர். மிகுந்த வேதனைக்கும் மன அழுத்தத்துக்கும் மத்தியில் அவர்களின் வாழ்க்கை வெகுவாக மாற்றமடைந்தது.

ஆண்கள் மத்தியில் மரணங்கள் மற்றும் காணாமலாக்கப்படுதல்கள் அதிகரித்தமையானது, விதவைகள் தலைமையிலான குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அடிப்படை வாழ்வில் மாற்றங்களை வலிந்து திணித்தது. பொருளாதார சுமை அதிகரித்து அடக்குமுறையானது.

குடும்பங்களை வழிநடத்தும் கட்டாயத்துடன் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அங்கு அதிகரித்தன. பொருளாதார நெருக்கடி மட்டுமே தனித்த அல்லது ஆதிக்கம் செலுத்தும் காரணியாக அங்கு இருக்கவில்லை.

முடிவற்ற பரவலான மற்றும் வாழ்க்கையை மாற்றும் தாக்கம் மற்றும் அழுத்தங்கள் ஊடுருவி, ஸ்தாபிக்கப்பட்டிருந்த சமூக நடத்தை முறைமைகளை அச்சுறுத்தும் காரணிகளாக அமைந்தன. தேவைகளே கண்டுபிடிப்புகளுக்கான தாயாகின்றன.

தைரியம் மற்றும் மீண்டெழும் தன்மைக்குத் தங்களைத் தாங்களே தகுதியானவர்களாக வெளிப்படுத்திக் கொண்ட பெண்கள், துரதிஷ்டத்தில் இருந்து வாய்ப்பை அரிதாகவே பயன்படுத்திக் கொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், பாரம்பரிய உறவுகளின் ஆதரவின்றி பெண்கள் புதிய வாழ்க்கை முறையில் கடினமான சவால்களை எதிர்கொண்டனர்.

பொருளாதார வாழ்வாதாரத்துக்கும் கலாசார மற்றும் பண்பாடுகள் தொடர்பான ஆதரவுககும் புதிய வழிகளைத் தேட வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

இவை, பாரம்பரியத்தின் அடிப்படையில் உருவான சமூகக் கட்டமைப்பின் சுமையை குறைப்பதற்குப் பதிலாக, மேலும் அதிகரிக்கவே வழிவகுத்தன.

வாழ்வாதாரப் போராட்டத்தில், பெண்கள் தாம் விரும்பாத பாத்திரங்களையும் ஏற்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இதனால் பாரம்பரிய மனப்பான்மையுள்ளவர்களுக்கும் இவர்களுக்கும் இடையிலான புரிதல் குறைந்ததால் புதிய சிந்தனையுடன் சமூகத்தை மறுசீரமைக்க வேண்டியேற்பட்டது. மறுகட்டமைப்பு மற்றும் அணுகுமுறைகளை மறுசீரமைக்கும் முழுமையான செயன்முறைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்தியா ஒரு முக்கியமான காரணியாக இருந்தது. கடந்த நூற்றாண்டின் இறுதி இரண்டு தசாப்தங்களிலும் இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் கரிசனை அதிகரித்திருந்தது.

1987ஆம் ஆண்டின் இந்தியா – இலங்கை உடன்படிக்கையில் இது தெளிவாக வெளிப்பட்டது. இது அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு வழிகோலியது.

உள்நாட்டின் சூழ்நிலைகள், இந்தியாவை சமாதானச் செயன்முறையில் முக்கிய வகிபாகத்தை முன்நகர்த்துவதில் தடுத்த போதிலும் இந்தியா அந்த விடயத்தில் நீடித்த கரிசனையை எப்போதும் காண்பித்தது.

இந்திய அமைதிப்படை மற்றும் பிற நடவடிக்கைகள் குறித்த பரவலான அதிருப்தி காணப்பட்ட போதிலும், இலங்கையில் பெரும்பான்மையினரிடமும் , இந்தியாவின் உறுதியான பங்குபற்றலை வரவேற்க வேண்டும் என்ற கருத்து குறிப்பிடத்தக்களவில் இருந்தது.

நோர்வே, மத்தியஸ்தம் வகித்து மேற்கொண்ட சில நடவடிக்கைகளை விமர்சித்தவர்களும், வெளிநாடுகளின் வகிபாகத்தை முழுமையாக நிராகரிக்கவில்லை.

இலங்கையின் சூழலில் வெற்றிகரமான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இதன் சில கூறுகள் அவசியம் என்பதை உண்மையில் உணர்ந்தமை மிகுந்த சுவாரஸ்யமானது.– என்றுள்ளது.


இலங்கை அரசியலின் சமாதானப் பேச்சுவார்த்தை காலகட்டத்தின் நிகழ்வுகளை அலசி ஆராயும் முக்கிய நூலாக இந்த நூல் விளங்குகிறது.

சமாதான கால அரசியலையும் வரலாற்றையும் பேராசிரியர், சிரேஷ்ட அரசியல் ஆளுமை, சட்டவியல் அறிஞர் என்னும் பன்முக ஆளுமை கொண்ட ஒருவரின் குறிப்பேட்டிலிருந்து அறிய விரும்பும் அரசியல் வரலாற்றுத் துறை கல்வியியலாளர்கள், இராஜதந்திரிகள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள் என்னும் அனைவருக்கும் வரலாற்றின் முக்கிய அத்தியாயங்களை இந்த நூல் மீள் நினைவூட்டுகின்றது.

ஆங்கிலமொழியிலான இந்த நூலின் ஆசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும் சட்டபீடத்தின் தகைசார் பேராசிரியருமாவார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழம் உள்ளிட்ட உலகின் பல புகழ்பூத்த பல்கலைக்கழகங்கள் அங்கீகரித்த இலங்கையின் புகழ்பூத்த கல்விமான்களில் இவரும் ஒருவராகத் திகழ்கின்றார்.

வெளிவிவகாரம், நீதி, அரசியலமைப்பு விவகாரம், இன விவகாரம், தேசிய ஒருமைப்பாடு, ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வ–தேச வர்த்தகம் மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளில் நாட்டின் அமைச்சரவையில் பதவி வகித்த சிரேஷ்ட அரசியல் ஆளுமையாகவும் இவர் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.







# முதியோர், மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு விழிப்புணர்வு நிகழ்வு



(நவாஸ்)

கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களம் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு இணைந்து நடத்திய, பி.எஸ்.டி.ஜி. வேலைத் திட்டத்தின் கீழ் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்பும் பராமரிப்பும் விழிப்புணர்வு நிகழ்வும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபர், அம்பாறை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் கெ.சிவகுமார், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வளவாளர்களாக அட்டாளைச்சேனை பிதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுத்தீன் சுகாதாரம் சம்மந்தமான அறிவூட்டலையும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உளவளத் துணை உத்தியோகத்தர் ஐ.எல். அபூ-றைஸ் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.பைசல் மதனி ஆகியோர் உளவளத் துணை ஆலோசனைகளையும் வழங்கினர்.

இந்த நிகழ்வில் 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த சமூக சேவையாளராக பாலமுனை அந்-நஹ்ஜா மாற்றுத் திறனாளி அமைப்பின் தலைவர் எம்.பி.. அப்துல் றகுமான், முதியோர்களுக்கான சிறந்த சமூக சேவகராக அட்டாளைச் சேனை - 14 ஐச் சேர்ந்த ஹுசைன், பாலமுனை -01 ஆம் பிரிவில் வசிக்கும் 100 வயதை தாண்டிய அவ்வா உம்மா ஆகியோர்களுக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டன.

# காலி முகத்திடல் கடற்கரையை சுத்தப்படுத்திய கடற்படையினர்!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கை கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மேற்கு கடற்படை கட்டளை கடற்படை வீரர்களின் பங்களிப்புடன் நேற்று சனிக்கிழமை காலி முகத்திடல் கடற்கரை சுத்தம் செய்யப்பட்டது.

இந்த கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் திட்டத்தின் கீழ் காலி முகத்துவாரத்துக்கு முன்னால் உள்ள கடற்கரையில் சிதறிக் கிடந்த பிளாஸ்டிக், பொலித்தீன் உள்ளிட்ட திடக்கழிவுகள் கடற்கரையிலிருந்து அகற்றப்பட்டு கடற்கரைச் சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் முறையாக அப்புறப்படுத்தப்பட்டது.

மேற்கு கடற்படைக் கட்டளைத் தளபதி உட்பட 200 இற்கும் மேற்பட்ட கடற்படையினர் இதில் கலந்து கொண்டனர்.











# கற்பிட்டியில் டித்வாவால் பாதிக்கப்பட்ட வீடுகளை நேரில் பார்த்த பிரதேச செயலர்!

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

டித்வா சூறாவளி மற்றும் கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல் வேறு பகுதிகள் அண்மையில் பாதிப்புக்குள்ளாகின.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு புதன்கிழமை விஜயம் செய்த கற்பிட்டி பிரதேச செயலாளர் எஸ்.என். பிரியதர்ஷினி சேதமடைந்துள்ள வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டு சேத விவரங்களை ஆய்வு செய்தார்.

இதன்போது முதற்கட்டமாகச் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கண்காணிக்கப்பட்ட நிலையில், ஏனைய பிரிவுகளிலும் சேதமடைந்த வீடுகளை பார்வையிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விஜயத்தின் போது அனர்த்த பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் கிராம உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட நிலையில் தவித்துக் கொண்டிருந்த ஒரு தாயின் வாழ்வாதாரத்தை சீரமைத்து, அவர் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்குத் தேவையான நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# ஊடகத்துறை மாணவி புவஸ்ரினாவின் "என்று தணியும்?" நாவல் வெளியீடு!

(த.சுபேசன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை மாணவி புவஸ்ரினா மெய்யழகன் எழுதிய மூன்றாவது நூலான "என்று தணியும்?" ஆவண நாவல் வெளியீடு அண்மையில் யாழ். ராஜா கிரீம் ஹவுஸ் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக பளை பிரதேச செயலாளரும் கவிஞருமான ஆர்.ஜெயசீலன் கலந்து கொண்டு நாவலை வெளியிட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து எஸ்.என். நிர்மலன் இசையில் புவஸ்ரினா எழுதிய "யாழ் பல்கலையே" இறுவெட்டும் வெளியீடு செய்யப்பட்டது.





இலங்கைச் சூழலில் ஒரு விமர்சனக் கண்ணோட்டம்

# இந்து கலாசார இருப்பியலும் கலாசார மாறுதலும்!

“மனிதன் ஒரு பிறவி அல்ல, ஒரு பயணம்”. பிறவியின் நோக்கம் என்பது அறிவைப் பெறுவதும், தர்மத்தை நிலை நிறுத்துவதுமாகும்.

இலங்கையின் மதச்சார்பு வாழ்க்கை முறை பல அடுக்குகளைக் கொண்ட கலாசார வேர்களைக் கொண்டது. “இருப்பியல்” என்ற சொல்லில் நம்முடைய அடையாளம், ஆன்மீகம், வாழ்க்கை நோக்கம் ஆகிய அனைத்தும் இணைந்துள்ளன. ஆனால் நவீனமயமாதல், உலகமயமாதல், மதமாற்றங்கள், கல்வி முறை மாற்றம் ஆகியவை இந்து மரபின் நடைமுறை நிலையைப் பாதித்துள்ளன.

இலங்கை இந்துக்கள் பெரும்பாலும் வடமாகாணங்களிலும் மலையகத்திலும் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கை கோவில் வழிபாடு, குடும்ப பூஜைகள், அறநெறி விழுமியங்கள், சமூக நிகழ்வுகள் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் முருகன், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் போன்ற கோவில்கள் தெய்வீக மையங்களாக மட்டுமின்றி கலாச்சார இருப்பின் அடையாளங்களாகவும் உள்ளன. ஆனால் சமீப காலங்களில் இந்த மரபுகள் குறைந்து வருகின்றன. கொழும்பு பல்கலைக்கழகம் வெளியிட்ட 2019“Hindu Cultural Practices in Sri Lanka” ஆய்வின் படி, நகர்ப்புறங்களில் வாழும் இளம் தலைமுறையில் சுமார் 40 வீதம் பேர் மாதந்தோறும் கோவில் வழிபாட்டில் பங்கேற்கவில்லை. அதேபோல், பாரம்பரிய விழாக்களில் குடும்ப ஈடுபாடு 1990 களுடன் ஒப்பிடுகையில் 25 வீதம்வரை குறைந்துள்ளது (Census & Statistics Department, 2021). இது ஒரு முக்கியமான கலாசார மாற்றத்தைக் குறிக்கிறது. மரபு தொடர்ந்தாலும் அதன் நடைமுறை வடிவம் மாறி வருகிறது.

மதமாற்றம் என்பது வெறும் மத மாற்றமே அல்ல, அது ஒரு கலாச்சார இடமாற்றமாகும். Department of Census and Statistics வெளியிட்ட 2021 கணக்கெடுப்பின் படி, வடமாகாணத்தில் கடந்த இருபது ஆண்டுகளில் 4.2 வீதமான இந்துக்கள் மதமாற்றம் செய்துள்ளனர். இது சிறிய எண்ணிக்கையாகத் தோன்றினாலும், அந்த மாற்றம் சமூக ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மலையகப் பகுதிகளில், கிறிஸ்தவ மற்றும் பௌத்த அமைப்புகள் கல்வி, மருத்துவம், சமூக நல சேவைகள் மூலம் மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளன. அதாவது, மதம் இங்கு ஒரு அடையாளம் அல்ல, ஒரு அதிகார மற்றும் வாழ்வாதார வாய்ப்பு ஆக மாறியுள்ளது. இது “மதநம்பிக்கையின் பொருளாதாரமயமாதல்” எனக் குறிப்பிடப்படுகிறது.

“மனிதன் ஒரு பிறவி அல்ல, ஒரு பயணம்”. அதாவது, பிறவியின் நோக்கம் என்பது அறிவைப் பெறுவதும், தர்மத்தை நிலைநிறுத்துவதுமாகும். நவீன உளவியல் இத்தகைய பார்வையை “ மன அமைதி உளவியல்” (Existential Psychology) என அழைக்கிறது. பகவத்கீதையில் கிருஷ்ணர் கூறும் நிஷ்காம கர்மா (செயலில் பற்றில்லா கடமை) இன்று உலக மனநலவியல் மையங்களில் “mindful living” என்ற பெயரில் பிரபலமாகியுள்ளது. “பகவத் கீதையை வாசிக்கும் மாணவர்களில் 72 வீதம் பேர் தங்கள் மன அழுத்தம் குறைந்ததாக தெரிவித்துள்ளனர்.” இது, இந்து தத்துவத்தில் உள்ள மனோவியல் ஆழத்தை வெளிக்காட்டுகிறது. அதனை கல்வி மற்றும் மனநல சேவைகளுடன் இணைப்பது அவசியமாகிறது.

இலங்கையில் இந்து சமயக் குருக்கள் சபை, சிவஞான யோகா நிலையம், இந்து மஹாசபைகள் போன்ற அமைப்புகள் தொடர்ந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. ஆனால் அவற்றின் செயல்பாடு பெரும்பாலும் உள்ளூர் மட்டத்திலேயே கட்டுப்பட்டுள்ளது. Hindu Affairs Ministry 2022 Report குறிப்பிடுகிறது “ஆலயங்களில் 65 வீதம் ஆன்மீக கல்வி வகுப்புகள் பொருளாதார மற்றும் நிர்வாக காரணங்களால் நிறுத்தப்பட்டுள்ளன.” மேலும், இளைய தலைமுறையை ஈர்க்கும் விதமான நவீன ஊடகப் பிரசாரங்கள் குறைவாக உள்ளன. இதன் விளைவாக, ஆன்மீக வழிகாட்டல் பாரம்பரிய வடிவில் மட்டும் சுருங்கியுள்ளது. சமய போதகர்களின் பங்கு வழிபாடு நடத்துவது மட்டுமின்றி, மனநல வழிகாட்டலாகவும் விரிவடைய வேண்டும். இதற்காக முன்னெடுப்புக்களை கலாசார, இந்து கலாசார பண்பாட்டு அலுவல் திணைக்களங்கள் மூலம் அரசாங்க கவனத்துக்குக் கொண்டு செல்லல் வேண்டும்.

நவீனமயமாதல், ஊடகம் மற்றும் மத சிந்தனைக்கான புதிய சவால்களாவன, இன்றைய ஊடக உலகில் மதம் பெரும்பாலும் பொருளாதார விளம்பரம் அல்லது அரசியல் வலிமை எனவே பிரதிபலிக்கப்படுகிறது. இது இளம் தலைமுறையின் நம்பிக்கைக் கோட்பாட்டை கலங்கச் செய்கிறது. 2024 இல் நடத்தப்பட்ட Youth Values Survey (Colombo) ஆய்வின்படி, 18 – 25 வயது இளையோரில் 53 வீதம் பேர் தங்களை “ஆன்மீகமற்றவர்” எனக் குறிப்பிடுகின்றனர். இது, ஒரு கலாச்சார அடையாள இழப்பின் தொடக்கம். நவீன ஊடகங்கள் மத உணர்வை நவீன வாழ்க்கைமுறையுடன் இணைக்கும் வழி வகுக்காதது இதற்குக் காரணமாகும். இந்து கலாசார இருப்பியல் என்பது “நிலைத்தல்” மற்றும் “மாறுதல்” ஆகிய இரண்டையும் ஒருங்கே தாங்கும் ஒரு தத்துவமாகும். அதாவது, மாற்றம் அதற்குள் இயற்கையாகவே இடம்பெறும். ஆனால், இன்றைய மாறுதல்கள் “நிலைத்த மதப் பாரம்பரியத்தைக்” குன்றச் செய்கின்றன. அறநெறி கல்வியின் வீழ்ச்சி, மதமாற்றம், கல்வி முறை சீர்கேடு, ஊடக கலாசாரம் ஆகியவை சேர்ந்து “இந்து அடையாள இருப்பியலை” பாதிக்கின்றன. இதன் விளைவாக, மதம் ஒரு உள்ளார்ந்த ஆன்மீக தேடல் அல்லாமல், ஒரு வெளிப்படையான நிகழ்ச்சி எனப் பார்க்கப்படுகிறது.

பரிந்துரைகள்

இந்த நிலையை மாற்ற, சில அடிப்படை வழிமுறைகள் அவசியம். மாறிவரும் சூழ்நிலை புரிந்துகொண்டு அதற்கான ஆய்வுகளை துரிதப்படுத்துவதன் மூலம் ஒரு இனத்தின் அடையாளமான இந்து கலாசார இருப்பியல் பேணி பாதுகாப்பதற்கான சூழல் கிடைக்க பெறும். ஆகவே இளம் ஆய்வாளர்கள் இக்கருத்துக்களை கரிசனை கொண்டு மேலும் தனது பிரதேசம் சார்ந்த மாறுதலுரும் இருப்பிலை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை செய்தல் காலத்தின் தேவையாகும். வேதம், கீதை, புராண இலக்கியம் போன்றவை மதக்

தொடர்ச்சி▼

# இந்து கலாசார இருப்பியலும் கலாசார மாறுதலும்!

தொடர்ச்சி▲

கல்வி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு ஆன்மீக உளவியல் மற்றும் நெறிப்படுத்தப்பட்ட வாழ்வு என்ற பாடங்கள் உருவாக்கல். சமய அமைப்புகளின் புது நோக்கு களை கண்டறிதல். இளைய தலைமுறைக்கு தொழில்நுட்பம், சமூக ஊடகம் வழியாக மத விழிப் புணர்வு பரப்புதல். மற்றும் “இந்து வாழ்க்கை மதிப்பு முகாம்கள்” மனநல, சமூக நலக் கோணங்க ளில் ஆய்வுகளை செய்தல், Hindu Affairs Department உடன் இணைந்து தேசிய ஆன்மீக விழிப்புணர்வு மாதம் அறிவித்தல், மாற்றத்தைத் தடுக்கும் வகையில் பொருளாதார ஆதரவு, கல்வி உதவித் திட்டங்கள். அறநெறி கல்வி வலுப்படுத்தல், ஆசிரியர் பயிற்சி மையங்களில் மத அறநெறி பயிற்சி தொகுதிகள் பெற்றோருக்கான மத விழிப் புணர்வு பணிகள்.

இந்து கலாசார இருப்பியல் என்பது வெறும் மத அடையாளம் அல்ல.அது இலங்கையின் பண்பாட்டு இதயத் துடிப்பாகும். நவீனமயமாதல், பொருளாதாரப் பிரச்சினைகள், கல்வி மாற்றம், மதமாற்றம் போன்றவை அதன் வெளிப்புற வடி வத்தை மாற்றினாலும், அதன் ஆன்மீக உயிர் இன்னும் அழிவடையவில்லை. அந்த உயிரை நிலைநிறுத்துவது நமக்குள் உள்ள சிந்தனை, அறநெறி உணர்வு, ஆன்மீகத் தார்மீகம் ஆகிய வற்றின் வழியே மட்டுமே சாத்தியம். அந்த நிலைப் பாட்டை மீட்டெடுக்க, கல்வி, ஊடகம், சமய வழி காட்டல் ஆகியவை ஒன்றிணைய வேண்டும். இது வெறும் மதத்தின் காப்பு அல்ல, ஒரு நாட்டு கலாசார அடையாளத்தின் பாதுகாப்பும் கூட.

**சரவணன் லக்ஹரன்,**
**மெய்யியல் துறை,**
**யாழ். பல்கலைகழகம்.**

# நற்பிட்டிமுனை பாலர் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

**(றிபாஸ்)**

கல்முனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை அல் அக்ஸா பாலர் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், கலை நிகழ் வும் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடை பெற்றன.

பாடசாலை அதிபர் இஸ்மாயில் றியாஸா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத் தரணி சீ.எம்.ஹலீம் பிரதம அதிதியா கவும், மாணவர்களின் பெற்றோர்கள் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்ட னர்.

கலை நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பிரதம அதிதி யால் மாலை, அணிவிக்கப்பட்டுப் பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட் டன.












# பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரமும் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியம்

**- ஹஸ்பர் ஏ ஹலீம். -**

அண்மையில் நாட்டில் பெருமளவான சேதங்களை ஏற்படுத்தி நாட்டின் தலை விதியை மாற்றியமைத்த டித்வா புயல் காரணமாக இன்னும் அதில் இருந்து மீள எழ முடியாது பாதிக்கப்பட்ட மக்கள் தவிக்கின்றனர்.

நாட்டின் மலையகப் பகுதி உட்பட கிழக்கு மாகாணத்தையும் இது பாதித்துள்ளது. கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு, குளங்களின் வான் கதவுகள் உடைப்பு என பல பேரிடர் மூலமாக பல உயிர் சேதங்களையும், பல சொத்துக்களையும் இழக்கச் செய்துள்ளது. இதனால் கிழக்கு மாகாணத்தில் அதிகம் திருகோணமலை மாவட்டமும் பாதிக்கப்பட்ட நிலையில் முக்கிய தொழில்களாக காணப்படுகின்ற விவசாயம், மீன் பிடி, கால் நடை வளர்ப்பு போன்றனவும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பாடசாலைகளும் பாதிக்கப்பட்டு பாடசாலை செல்லும் மாணவர்களின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய நிலையும் காணப்படுகிறது. உளவளத் துணை மூலமாக அவர்களது உள்ளத்தை வளப்படுத்தி மீண்டும் பாடசாலைக் கல்வியை மாணவர்கள் மத்தியில் ஊக்குவிக்க செய்ய வேண்டும். இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் கிழக்கு மாகாண பாதிப்பு தொடர்பில் மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர பாடசாலை அபிவிருத்தி மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதி உதவி வழங்கியமை தொடர்பிலும் வெளியிட்டுள்ளார். இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 142,793 நபர்களை சேர்ந்த 46,250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் 12 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முழுமையாக 132 வீடுகளும் பகுதியளவில் 2182 வீடுகளும் சேதமடைந்துள்ளன. அரசாங்கத்தால் வழங்கப்படும் கொடுப்பனவாக 25 ரூபாவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த 23,889 குடும்பஙாகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் 597,225,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதனுடன் இணைந்ததாக கிழக்கில் பாதிக்கப்பட்ட 17 கல்வி வலயங்களை சேர்ந்த 346 பாடசாலைகளுக்காக 253,859,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அம்பாறையில் 07 வலயங்களை சேர்ந்த 87 பாடசாலைகளும், மட்டக்களப்பில் 05 வலயங்களை சேர்ந்த 113 பாடசாலைகளும், திருகோணமலையில் 05 வலயங்களை சேர்ந்த 146 பாடசாலைகளுக்குமே இவ்வாறு மீள் புனர் நிர்மாணத்துக்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்து என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டித்வா புயல் காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்கான அழிவுகள் மற்றும் அதற்கான நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டமைதொடர்பில்மாகாணவிவசாயபணிப்பாளர் எம்.எஸ்.றினூஸைத் தொடர்பு கொண்டு வினவிய போது இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி▼





# பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரமும் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியம்

தொடர்ச்சி▲

“கிழக்கில் மொத்தமாக 21,272 ஹெக்ரெயர் நிலப்பரப்புக்களை சேர்ந்த 33,640 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட அடிப்படையில் பார்க்கின்ற போது திருகோணமலை மாவட்டத்தில் 15,389 ஹெக்ரெயர் பரப்பளவை கொண்ட 23516 விவசாயிகளும், மட்டக்களப்பில் 2961 ஹெக்ரெயரைச் சேர்ந்த 5009 விவசாயிகளும், அம்பாறையில் 2922 ஹெக்ரெயரைச் சேர்ந்த 5115 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது வரைக்கும் சுமார் 3190 மில்லியான் ரூபா நஷ்ட ஈட்டு தொகையாக வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். 24.12.2025 ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம் கமநல சேவைகள் அபிவிருத்தி நிலையம் ஊடான தரவுகளுக்கமைய இதனை வெளிப்படுத்தினார்.

விவசாய செய்கை அழிவு தொடர்பான சேத விவரங்களை கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து விவசாய திணைக்களமும் மதிப்பீடு செய்திருந்தது.விவசாய துறை அமைச்சரும் திருகோணமலைக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை பார்வையிட்டுள்ளார்.

முக்கியமாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் நெற் பயிர் விவசாய செய்கை சிறந்து விளங்குவதுடன் விவசாயத்தை நம்பியே விவசாயிகள் அன்றாட ஜீவனோபாயத்தை கடத்துகின்றனர். நெற் பயிர்ச் செய்கைகளுக்காக அழிவடைந்த வயல் நிலங்களில் மீண்டும் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பலர் தங்களுக்குத் திருப்தி இல்லை எனவும் அங்கலாய்க்கின்றனர். கடன்பட்டு செய்த விவசாய செய்கை மூலமாக விளைச்சலை எதிர்பார்த்து விதைத்திருந்த போதும் கூட இவ்வாறான பாரிய வெள்ளம் ஏற்பட்டு அழிவுகளை சந்திக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்துக் கூட பார்க்கவில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்திருந்தனர். விவசாயிகளின் மனநிலையில் மாற்றங்களை கொண்டு வருவதும் பொருத்தமாக இருக்கும் என இவ்வேளையில் ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுகிறது.

இதுபோன்ற பேரிடர் காரணமாக மீள முடியாதுஆராத்துயரில்பலர்பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கும் நிலையில் பாடசாலை மாணவர்கள் உட்பட சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். யுனிசெவ்வின் 2025.12.05 ஆம் திகதிய தரவுகளின் அடிப்படையில் மொத்தமாக நாடு தழுவிய ரீதியில் 462,274 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு மீண்டும் பழைய நிலையை அடைய சர்வதேச நாடுகளின் உதவி ஒத்தாசைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அனர்த்தங்களில் இருந்து முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக உயிரிழப்புக்களைப் பாதுகாக்க முடியும்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக பல உதவித் தொகைகள் வழங்கப்படுவதாக அரசு அறிவிக்கப்பட்ட நிலையில் சிலரின் ஆதங்கம் தங்களுக்கு நஷ்ட ஈட்டு தொகை கிடைக்கவில்லை எனவும் நிவாரணங்களை பெற்றுத்தரக் கோரிய போராட்டங்களும் இடம் பெற்றன.

எனவேதான் பொதுவான நிவாரண நஷ்டஈடுதொடர்பில்பொறிமுறைஒன்றை வழங்கிப் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களுடன் இணைந்த வாழ்வாதாரங்களை மேம்படுத்தி விரைவில் நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் உறுதி பூண வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.



குணம்ஸ் சூப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# பணி நிரந்தரம் கோரி வீதி மறியல் போராட்டம்: சென்னையில் தூய்மைப் பணியாளர்கள் கைது

பணி நிரந்தரம் கோரி என்.எஸ்.சி. போஸ் வீதியில் மறியலில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை மாநகராட்சியில், ராயபுரம், திரு.வி.க.நகர் மண்டலங்களில் தூய்மைப் பணியை தனியார்மயமாக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இம்மண்டலங்களில் தற்காலிகமாக பணிபுரிந்த தூய்மைப் பணியாளர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தூய்மைப் பணியை மாநகராட்சியே நேரடியாக மேற்கொள்ள வேண்டும். அரசு நிர்ணயித்த ஊதியத்தை வழங்க வேண்டும். அனைத்து பணியாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தூய்மைப் பணியாளர்களுக்கு பணியின் போது 3 வேளை உணவு, குடியிருப்பு வசதி, மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட 7 அறிவிப்புகளை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். அதன் பின்னர் பெரும்பாலான தூய்மைப் பணியாளர்கள் பணிக்கு சென்றுவிட்டனர். ஒரு பிரிவினர், பணி நிரந்தரம் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்வேறு பகுதிகளில் வீதி மறியலிலும், மெரினாவில் கடலில் இறங்கியும் போராடி வந்தனர். நேற்று அண்ணா சதுக்கம் மற்றும் தலைமைச் செயலகம் அருகே வீதி மறியலில் ஈடுபட்டனர். அம்பத்தூர் பகுதியிலும் உண்ணாவிரத போராட்டங்களை நடத்தினர்.

இதன் தொடர்ச்சியாக, தலைமைச் செயலகம் நோக்கி ஊர்வலமாக சென்று மனு கொடுக்க திட்டமிட்டு, குறளகம் அருகே தூய்மைப் பணியாளர்கள் கூடினர். அவர்கள் ஊர்வலமாக புறப்பட்ட போது, பொலிஸார் தடுத்து நிறுத்தியதால், என்.எஸ்.சி. போஸ் வீதியில் திடீர் மறியலில் ஈடுபட்டனர். தொடர்ந்து, பொலிஸார் அவர்களை கைது செய்து, தூக்கிச் சென்று பஸ்களில் ஏற்றி சென்றனர்.

அதனால் அந்த வீதியில் நேற்று கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த மறியல் போராட்டத்தில் 1,163 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் பின்னர் இரவு 7 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் உழைப்போர் உரிமை இயக்கம் தெரிவித்துள்ளது.





# பழனிசாமியுடன் விவாதிக்க முதல்வருக்கு நேரமில்லை

## கனிமொழி தெரிவிப்பு



முதல்வர் ஸ்டாலினுக்கு இருக்கும் வேலைப்பளுவால் பழனிசாமியுடன் விவாதிக்க அவருக்கு நேரமில்லை என கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடி அகழ் வைப்பகத்தை தூத்துக்குடி அரசு மாதிரி பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து கனிமொழி எம்.பி. நேற்று பார்வையிட்டார். அவர்களுக்கு தொல்லியல்துறை அதிகாரிகள் விளக்கினர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் கனிமொழி கருத்து தெரிவிக்கையில், "தமிழர்களின் வரலாறு, நாகரிகம், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே எழுத்து வடிவம் கொண்ட தமிழ் மொழி ஆகியவற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பை கீழடி அகழ் வைப்பகம் மூலம் தமிழக முதல்வர் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். நாடு முழுவதும் கிராமப்புற மக்களுக்காக கொண்டு வரப்பட்டது தான் 100 நாள் வேலை உறுதித் திட்டம். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்தே இத்திட்டத்தில் 100 நாள்களுக்கு வேலை கொடுத்ததே இல்லை. அதிகபட்சமாக 40 நாள்களுக்குத் தான் வேலை கொடுக்கப்பட்டது.

தற்போது இந்த திட்டத்தின் பெயரை மாற்றியது மட்டுமின்றி, வேலை கொடுக்கும் உரிமையையும் மாநில அரசிடமிருந்து பறித்துள்ளனர். முழுமையாக மத்திய அரசே ஊதியம் வழங்கி வந்த நிலையில், அதிலும் 40 சதவீதத்தை மாநில அரசை கொடுக்க சொல்லியுள்ளனர். கூடுதலான நபர்களுக்கு வேலை கொடுத்தால் மாநில அரசு தான் ஊதியம் வழங்க வேண்டும். இதன்மூலம் இந்த திட்டத்தையே முடக்கி விட்டனர்.

திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டி உலகம் முழுவதும் பெருமைப்பட்டவர் தான் பழனிசாமி. முதல்வர் ஸ்டாலினுக்கு இருக்கும் வேலைப்பளுவால் திட்டங்கள் குறித்து பழனிசாமியுடன் விவாதிக்க அவருக்கு நேரமில்லை. கட்சியில் உள்ள மற்ற தலைவர்கள் அவருடன் விவாதிக்க தயாராக உள்ளனர். அதையெல்லாம் தாண்டி வேறு கேள்விகள் அவருக்கு இருந்தால் முதல்வர் உரிய பதில் அளிப்பார்." என்று தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்றவர் விஜயகாந்த்

## முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி



தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற விஜயகாந்தின் நற்பணிகளை நினைவுகூர்கிறேன் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் நினைவுநாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"ஏழை மக்கள் மீது பெரும் பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் தன் உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற எனது அருமைநண்பர்-தே.மு.தி.க. நிறுவனர் கேப்டன் விஜயகாந்தின் நற்பணிகளை நினைவுகூர்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் காலமானார். அவரது உடலுக்கு லட்சக்கணக்கானோர் திரண்டு அஞ்சலி செலுத்திய நிலையில், இறுதிச் சடங்கில் அரசு மரியாதையும் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து சென்னையில் கட்சித் தலைமையகத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு, அங்கு நாள்தோறும் பூஜையும், அன்னதானமும் செய்யப்படுகிறது.

இந்நிலையில், விஜயகாந்தின் இரண்டாமாண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, அரசியல்தலைவர்கள் அவரின் நினைவுகளை பகிர்ந்து வருகின்றனர்.

முன்னதாக இன்று காலை முதலே சென்னை கோயம்பேட்டில் அவரது நினைவிடத்துக்கு தே.மு.தி.கவினர் ஏராளமானோர் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், பா.ஜ.க. முன்னாள் அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.





# சோமாலிலாந்தை தனி நாடாக அங்கீகரித்தது இஸ்ரேல் அரசு

## சோமாலியா கடும் எதிர்ப்பு

சோமாலியாவில் இருந்து பிரிந்து சுயாட்சி அதிகாரம் கோரி வரும் சோமாலிலாந்து பகுதியை, ஒரு சுதந்திர நாடாக இஸ்ரேல் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.

இதனூடாக, இத்தகைய அங்கீகாரத்தை வழங்கும் உலகின் முதல் நாடாக இஸ்ரேல் அமைந்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் சோமாலிலாந்து தலைவர் அப்திரஹ்மான் மொஹட் அப்துல்லாஹி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியானது.

இரு நாடுகளும் முழுமையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தவும், பரஸ்பரமாக தூதரகங்களைத் திறக்கவும் ஒப்புக்கொண்டுள்ளன.

இதனிடையே, விவசாயம், சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் உடனடி ஒத்துழைப்பை வழங்க இஸ்ரேல் முன்வந்துள்ளது.

சோமாலிலாந்து விரைவில் “ஆபிரகாம் உடன்படிக்கையில்“ இணையும் என்று அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு சோமாலியா அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தனது நாட்டின் இறையாண்மை மீதான நேரடித் தாக்குதல் என்றும், சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது என்றும் அந்தநாட்டுப் பிரதமர் ஹம்சா அப்தி பாரே கூறியுள்ளார்.

அத்துடன், எகிப்து, துருக்கி மற்றும் ஜிபூட்டி ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இணைந்து இஸ்ரேலின் இந்த முடிவை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது பிராந்தியத்தின் நிலைத்தன்மையைப் பாதிக்கும் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சோமாலிலாந்து என்பது சோமாலியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், இஸ்ரேலின் இந்த ஒருதலைப்பட்சமான முடிவு ஆபத்தான முன்னுதாரணமாக அமையும் என்றும் ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு சோமாலியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போருக்குப் பின்னர், சோமாலிலாந்து தன்னைத் தனி நாடாக அறிவித்துக் கொண்டது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சொந்தமாக நாணயம், கடவுச்சீட்டு மற்றும் பொலிஸ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

அத்துடன், ஓரளவுக்கு நிலையான ஜனநாயக ஆட்சியை நடத்தி வருகிறது. ஏடன் வளைகுடாவில் மிக முக்கியமான புவிசார் அரசியல் இடத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச அளவில் எந்தவொரு ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடும் இதுவரை சோமாலிலாந்தை அங்கீகரிக்கவில்லை.

இஸ்ரேலின் இந்த முடிவு, மற்றைய நாடுகளும் சோமாலிலாந்தை அங்கீகரிக்க ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக செங்கடல் பகுதியில் ஈரான் ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல் நிலவும் சூழலில், இந்தப் பிராந்தியத்தில் ஒரு நட்பு நாட்டைப் பெறுவது இஸ்ரேலுக்குப் பாதுகாப்பு ரீதியாக மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.



# உக்ரைன் மீது ரஷ்யா ஆளில்லா விமான தாக்குதல்: போர் விமானங்களை நிலைநிறுத்தியது போலந்து





உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய சரமாரியான ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்களைத் தொடர்ந்து, அண்டை நாடான போலந்து தனது வான்வெளியைப் பாதுகாக்கப் போர் விமானங்களை அவசரமாக நிலை நிறுத்தியுள்ளது.

நேற்று அதிகாலை முதல் ரஷ்யா ஏவிய சுமார் 500 ஆளில்லா விமானங்கள் மற்றும் 40 ஏவுகணைகள், உக்ரைனின் எரிசக்தி நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் குடியிருப்புகளைக் குறி வைத்தன.

இந்தத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், 28 பேர் காயமடைந்தனர்.

கடும் குளிருக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான வீடுகளில் மின்சாரம் மற்றும் வெப்பமூட்டும் வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை உறுதி செய்யும் நோக்கில், தரைவழி வான் பாதுகாப்பு அமைப்புகளையும் பொலிஸ் மற்றும் இராணுவ ரேடார்களையும் போலந்து தயார் நிலையில் வைத்திருந்தது.

எனினும், போலந்து வான்வெளியில் எவ்வித அத்துமீறலும் நிகழவில்லை எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

மறுபுறம், இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இராஜ தந்திர முயற்சிகளும் தீவிரமடைந்துள்ளன.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, இன்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை புளோரிடாவில் சந்தித்துப் பேச உள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, அமைதிக்கான புதிய 20 அம்ச வரைவுத் திட்டத்தை வொலோடிமிர் செலன்ஸ்கி முன்வைக்க வுள்ளார்.

அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதங்களைக் கோரும் இந்தத் திட்டத்தை ட்ரம்ப் ஆய்வு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விளாடிமிர் புடின் போரை நிறுத்த விரும்பவில்லை என்றும், பேச்சுவார்த்தைகளை விட ஏவுகணைகளே ரஷ்யாவின் குரலாக ஒலிக்கின்றன என்றும் ஜெலன்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஹமாஸுக்கு நிதி திரட்டிய 9 பேர் இத்தாலியில் கைது!







இத்தாலியில் பாலஸ்தீன மக்களுக்கான மனிதாபிமான உதவி என்ற பெயரில் ஹமாஸ் அமைப்புக்கு சுமார் 7 மில்லியன் யூரோக்கள் நிதி திரட்டி அனுப்பியதாக 9 பேரை இத்தாலியத் பொலிஸ் கைது செய்துள்ளது.

இத்தாலியின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு பொலிஸ் இணைந்து நடத்திய அதிரடி சோதனையில் இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இந்த புலனாய்வு விசாரணைகள் தொடங்கப்பட்டன.

இந்தநிலையில், பாலஸ்தீன பொது மக்களுக்கு உதவும் நோக்கில் நிதி திரட்டப்படுவதாகக் கூறி, ஒரு ‘சிக்கலான நிதி திரட்டும் முறையைப்’ பயன்படுத்தி ஹமாஸ் அமைப்புக்கு இவர்கள் பணத்தை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திரட்டப்பட்ட நிதியில் 71 சதவீதத்துக்கும் அதிகமான தொகை ஹமாஸின் இராணுவப் பிரிவிக்கும், தற்கொலைப்படைத் தாக்குதலில் ஈடுபட்டவர்களின் குடும்பங்களுக்கும் பயங்கரவாத வழக்குகளில் கைதானவர்களுக்குமான ஆதரவு நிதியாகவும் மாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கைது நடவடிக்கையோடு சேர்த்து, சுமார் 8 மில்லியன் யூரோக்கள் மதிப்பிலான சொத்துக்களையும் இத்தாலிய பொலிஸ் பறிமுதல் செய்துள்ளது.

கைதானவர்களில் ஒருவர் இத்தாலியில் உள்ள ‘பாலஸ்தீன சங்கத்தின்’ தலைவராகச் செயல்பட்டு வந்த ஒரு வரும் அடங்குகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸின் நிதி திரட்டும் அமைப்பில் இவர் முக்கியப் பங்கு வகித்தார் என பொலிஸ் கருதுகிறது. இருப்பினும், தன் மீதான குற்றச்சாட்டுகளை அவர் மறுத்துள்ளார்.

பக்கங்கள் - 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 28/12/2025

## காய்ச்சல் பரவுகை கனடாவில் அதிகரிப்பு



C2▶




# உக்ரைனுக்கு 2.5 பில்லியன் டொலர் நிதி உதவி வழங்குகிறது கனடா அரசு

ரஷ்யாவின் தொடர்ச்சியான தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு, கனடா அரசாங்கம் கூடுதல் நிதி உதவியாக 2.5 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை கனடா பிரதமர் மார்க் கார்னி, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் இணைந்து வெளியிட்டார்.

இந்த நிதி உதவி, உக்ரைனின் பொருளாதாரத்தை நிலைநாட்டுவதற்கும், போர் காரணமாக சேதமடைந்த கட்டமைப்புகளை மீளமைப்பதற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட அமைப்புகளிடமிருந்து கூடுதல் நிதி ஆதரவைப் பெறுவதற்கு இந்த உதவி வழிவகுக்கும் என கனடா அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் உக்ரைனுக்கு சுமார் 10 பில்லியன் டொலர் வரை மறுசீரமைப்பு நிதி கிடைக்க வாய்ப்பு உருவாகும்.

C2▶

# கப்பம் கோரல் சம்பவங்கள் ஒன்டாரியோவில் அதிகரிப்பு






கனடாவின் ஒன்டாரியோ மாகாணம், கலிடன் பகுதியில் உள்ள ஒரு வணிக நிலையம் முன்பாக வெள்ளிக்கிழமை அதிகாலை துப்பாக்கிச்சூடு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை சுமார் 1 மணியளவில், பெர்ட்யூ கோர்ட் பகுதியில் அமைந்துள்ள ஒரு வணிக நிலையம் முன்பாக இந்த சம்பவம் நடந்துள்ளது. இச்சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில காலமாக கலிடன் மற்றும் டஃபரின் கவுண்டி பகுதிகளில் மிரட்டல் மூலம் பணம் வசூலிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்தது.

2023 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, இப்பகுதிகளில் 45 இற்கும் மேற்பட்ட மிரட்டல் வசூல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் சில சம்பவங்களில் வீடுகள் மற்றும் உள்ளூர் வணிக நிலையங்களை குறிவைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் “திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்” என கலிடன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கப்பம் கோரும் நோக்கில் மிரட்டல் விடுப்பதற்காக இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# கிரீன்லாந்து தீவினை தம்முடன் இணைக்கின்ற அமெரிக்காவின் நடவழிக்கைக்கு கனடா எதிர்ப்பு



அமெரிக்காவின் நடவடிக்கையை எதிர்க்கும் வகையில் கனடிய அரசாங்கம் அதிகாரபூர்வ கருத்து வெளியிட்டுள்ளது.

டென்மார்க்கின் தன்னாட்சி கொண்ட பிரதேசமான கிரீன்லாந்தை அமெரிக்கா இணைத்துக்கொள்ள விரும்புவதாக வொஷிங்டன் மீண்டும் கூறியுள்ள நிலையில், கனடாவின் வெளிநாட்டு விவகார அமைச்சர் அனிதா ஆனந்த், கிரீன்லாந்தின் இறையாண்மையை உறுதிப்படுத்தி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

டென்மார்க் வெளிநாட்டு அமைச்சர் லார்ஸ் லொக்கே ரச்முசென் உடன் தொலைபேசி மூலம் பேசிய ஆனந், "இறையாண்மை மற்றும் நிலப் பகுதிகளின் ஒருமைப்பாட்டை மதிப்பது அடிப்படையாகும் என்பதில் கனடாவின் முழு ஆதரவை" அவரிடம் தெரிவித்ததாக சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.

இந்த கருத்துக்கள், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்துக்கான தூதராக லூசியானா மாநில ஆளுநர் ஜெஃப் லாண்ட்ரியை நியமித்ததன் பின்னணியில் வெளியாகியுள்ளன.

அந்த நியமனத்தின் நோக்கம் "கிரீன்லாந்தை அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாற்றுவது" என லாண்ட்ரி கூறியிருந்தார்.

ஆனால், அதே நாளில் பின்னர் பேசிய லாண்ட்ரி, அமெரிக்கா "எந்த நாட்டையும் ஆக்கிரமிக்க முயற்சிக்கவில்லை" எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில், கிரீன்லாந்தின் நூக் நகரில் கனடா தூதரக அலுவலகம் திறக்க ஆனந்த் திட்டமிட்டுள்ளதாகவும், ஆர்க்டிக் கவுன்சில் மற்றும் நேட்டோ பாதுகாப்பு கூட்டமைப்பின் வழியாக டென்மார்க், கனடாவின் முக்கிய கூட்டாளி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காய்ச்சல் பரவுகை கனடாவில் அதிகரிப்பு



கனடாவில் இந்த ஆண்டுக்கான காய்ச்சல் பரவல் வழக்கத்தைவிட முன்கூட்டியே ஆரம்பித்துள்ளதாகவும், நாடு முழுவதும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆண்டின் காய்ச்சல் வைரஸ் அதிகமாக பரவும் தன்மை கொண்டதும், கடுமையான தாக்கம் ஏற்படுத்தக் கூடியதுமானதாக " இருப்பதாக தொற்று நோய் மருத்துவர் கிறிஸ்டோபர் லேபோஸ் தெரிவித்துள்ளார்.

பொதுவாக காய்ச்சல் பரவல் பருவத்தின் பின்னர்பகுதியில் உச்சத்தை எட்டும் நிலையில், இந்த ஆண்டில் அது முன்பே தீவிரமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக உ3உ2 வகை வைரஸ் மிகவும் தொற்றுதலுக்குரியதாக இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், நீங்கள் நோயுற்றிருந்தால் வீட்டிலேயே இருங்கள் என அறிவுறுத்தியுள்ளார்.

ஒட்டாவாவில் உள்ள கிழக்கு ஒன்றாரியோவில் குழந்தைகள் மருத்துவமனை, கடந்த வாரம் அவசர சிகிச்சைப் பிரிவில் தினமும் 200 இற்கும் அதிகமான நோயாளிகள் வருகை தந்ததாக தெரிவித்துள்ளது.

துரதிஷ்டவசமாக, சில உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. மேலும் மருத்துவமனை வருகைகளும் அனுமதிப்புகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன என அந்த மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## உக்ரைனுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், உக்ரைனின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஐரோப்பிய வங்கியிடமிருந்து பெறப்படவுள்ள 322 மில்லியன் டொலர் கடனுக்கு உத்தரவாதமாகவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள அண்மைய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை கடுமையாக கண்டித்த கனடா பிரதமர், "இந்த கடினமான காலகட்டத்தில் உக்ரைனுடன் கனடா உறுதியாக நிற்கும்." என கூறினார்.

இதற்கு பதிலளித்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, கனடாவின் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்து, இந்த நிதி உதவி உக்ரைன் மக்களின் மீட்சி மற்றும் மறுசீரமைப்புக்கு பெரும் வலுவாக அமையும் என தெரிவித்துள்ளார்.